**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**O.S. No. 130 / 2024**

**வா.சா.2 / முருகேசன் /28.07.2025**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாய மற்றும் குடிநீர் மோட்டார் பழுதுபார்ப்பதும் தேவைப்பட்டால் புதிதாக மோட்டார் வாங்கி விற்கும் தொழில் 1992 ம் ஆண்டு முதல் சுமார் 30 ஆண்டுகளாக செய்து வருகிறேன். 2007 முதல் தனியாக கடை வைத்து நடத்தி வருகிறேன். அந்த கடையின் நிர்வாகம், பில் போடுவது மற்றும் வரவு செலவுகளை நான் தான் கவனித்து வருகிறேன் என்றால் சரிதான். வரவு செலவு சம்மந்தமாக வரும் ஆவணங்களை படித்து பார்த்து தான் பணத்தை வசூல் செய்வேன் என்றால் சரிதான். எனக்கு 2006 ம் ஆண்டு திருமணம் ஆனது. எனக்கு இரண்டு மகள்கள். மூத்த மகள் 12 ம் வகுப்பு படித்து முடித்துவிட்டார், இளைய மகள் 10 ம் வகுப்பு படித்து வருகிறார். 3 ம் வாதி மைதிலி என் மனைவி ஆவார். நான், என் மனைவி மற்றும் எங்கள் இரண்டு மகள்கள் இன்றளவும் ஒன்றாக தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். வீட்டு நிர்வாகத்தின் முக்கிய முடிவுகள் எடுப்பது தகவல் பரிமாறி கொள்வது ஆகியவற்றை நானும் என் மனைவியும் சேர்ந்து தான் செய்வோம். இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்று கேட்டால் வக்கீல் அலுவலகத்தில் நான் விவரம் சொல்லி எனது வழக்கறிஞர் ராமகிருஷ்ணன் தயார் செய்து கொடுத்தார். அதை தயார் செய்யும் போது நானும், எனது சகளை மூர்த்தி மட்டும் இருந்தோம். மேற்படி மூர்த்தி என்பவர் யார் என்று கேட்டால் 1 ம் வாதி சுமதியின் கணவர் ஆவார். 2 ம் வாதி மாலதியின் கணவர் பெயர் சேனாதிபதி ஆகும். அவர் காலமாகிவிட்டார். வாதிகள் அனைவரும் சுமூகமாக தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் என்பது என் மாமனார் பழனிசாமி பிரதிவாதிகள் பெயரில் எழுதி வைத்த உயிலின் சான்றிட்ட நகல் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 உயிலில் கண்டுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **பி.வா.சா.ஆ.4** ஆகும். மேலும், வா.சா.ஆ.7 ல் 5 வது பக்கத்தில் இன்னாரொன்று நிரூபித்தவராக காணப்படும் இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

அது **பி.வா.சா.ஆ.5**. வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள முதலாவது சாட்சியாக சிவசாமி என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதுபோல் வா.சா.ஆ.7 உயிலில் முதல் மூன்று பக்கங்களில் காணப்படும் கையொப்பம் எனது மாமனார் பழனிசாமியின் கையொப்பம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தில் முதல் பக்கத்தில் இரண்டாவது பத்தியில் "1980 ம் வருடத்திய 453ம் எண்ணாக பதிவாகியுள்ள கிரய பத்திரப்படிக்கு எனக்கும் எனது தகப்பனார் அவினாசியப்ப கவுண்டருக்கும் கூட்டாக பாத்தியப்பட்டு எனது தகப்பனார் அவினாசியப்ப கவுண்டர் 11.11.2006ம் தேதியில் இறந்ததற்கு பின்னிட்டு எனது தாயார் வள்ளியம்மாள் 20.11.2009ம் இறந்ததற்கு பின்னிட்டு மேற்படியாரின் ஒரே வாரிசு என்ற முறையில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து உயில் சாசனம்" என்று வாசகம் அதில் கண்டுள்ளது என்றால் வாசகம் உள்ளது ஆனால் அந்த வாசகம் உண்மையா என்பது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 ஆவணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதா என்று கேட்டால் எனக்கு தெரியாது. கையெழுத்து மட்டும் கேட்டார்கள் போட்டு கொடுத்தேன். வா.சா.ஆ.7ல் உள்ள பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 கையொப்பங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் போடப்பட்டது என்றால் சரிதான். ஆனால், சார்பதிவாளர் முன்பாக நான் கையொப்பம் செய்யவில்லை. சற்று தள்ளி நின்று தான் கையொப்பம் போட்டேன். சார்பதிவாளர் என்னிடம் யார் என்ன என்று என்னிடம் கேட்கவில்லை. நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் வா.சா.ஆ.7 உயிலில் என்னை ஏமாற்றி மோசடியாக பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 சாட்சி கையொப்பம் பெறப்பட்டதாக முறையிடவில்லை என்றால் சரிதான். நான் இன்னாரென்று நிரூபித்தவராக இருந்து வா.சா.ஆ.7 உயிலில் பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 கையொப்பம் செய்ததால் தான் சார்பதிவாளர் ஆவணங்களை பரிசீலனை செய்து சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு வா.சா.ஆ.7 உயிலை பதிவு செய்துள்ளார் என்றும் அவ்வாறு அடையாளம் காட்டி பதிவு செய்ததற்கு பின்னிட்டு தற்போது மறுப்பதற்கு எனக்கு சட்டப்படியான உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் முழுமனதோடு வா.சா.ஆ.7 உயில் நடவடிக்கையில் பங்கெடுத்த காரணத்தினால் தான் நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7 உயிலில் கையொப்பம் செய்த விவரத்தை என் மனைவியிடம் அப்போது சொன்னேனா

என்றால் இல்லை. 2017ம் ஆண்டு முதல் இதுநாள் வரை வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தில் என்னிடம் நான் சொல்வது போல் மோசடியாக கையொப்பம் பெறப்பட்டதாக காவல் துறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், வழக்கறிஞர் அறிவிப்போ கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். வாதிகளுக்கும் எங்களுக்கும் முறையாக தகவல் தெரிவித்து எங்கள் அனுமதியின் பேரில் தான் வா.சா.ஆ.7 உயில் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றும் அதுபற்றி என் மனைவியான 3ம் வாதிக்கும் வா.சா.ஆ.7 ஏற்பட்ட காலத்தில் அதற்கு முன்பும் பின்பும் அதுபற்றி தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் குறுக்குவிசாரணையின் போது சொல்வது போல் எனது மாமானரின் அப்பா அவினாசியப்ப கவுண்டருக்கு அய்யம்பாளையம் கிராமம் நடுப்பாளையத்தில் இருந்த ஒரு விவசாய பூமியை விற்று அதில் வந்த வருமானத்தை கொண்டு தான் தாவா சொத்துக்களும் மற்ற இதர சொத்துக்கள் வாங்கப்பட்டதாக சொல்வதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்கண்டவாறு அய்யம்பாளையம் கிராமம் நடுப்பாளையத்தில் பூர்விக சொத்து விற்கப்பட்டு தாவா சொத்து வாங்கப்பட்டதாக வாதிகள் தங்களது பிராதில் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து பழனிசாமி மற்றும் அவரது தகப்பனார் அவினாசியப்ப கவுண்டர் ஆகியோர் கூட்டாக கிரய பத்திர எண்.453/1980ன் படி சுயமாக பாத்தியப்பட்ட சொத்து என்றும் அவினாசியப்ப கவுண்டரும் அவரது மனைவி வள்ளியம்மாள் காலமான பிறகு வாரிசு மற்றும் சுயார்ஜித அடிப்படையில் பழனிசாமிக்கு பாத்தியப்பட்டு அவர் வா.சா.ஆ.7 உயிலின் படி பிரதிவாதிகளுக்கு சட்ட விதிகளுக்குட்பட்டு எங்களுக்கு தெரிய எழுதி வைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் வா.சா.ஆ.7 உயில் பிரதிவாதிகள் பெயரில் இருப்பதாலும் அவர்கள் வாடகை தர மறுத்ததாக சொல்லி நானும் வாதிகளுடன் சென்று வழக்கிற்கு முந்தைய அனைத்து நடவடிக்கைளிலும் பங்கெடுத்தேனா என்றால் நான் போகவில்லை வாதிகள் தான் போய் அவ்வாறு பிரதிவாதிகளிடம் கேட்டார்கள். பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு நானும் போய் கேட்டதாக சொல்லியிருந்தால் அது தவறு. 3ம் வாதி என் மனைவி என்பதாலும், இதர வாதிகள் எனது நங்கையார்கள் என்பதாலும் சட்டப்படி நாங்களறிய பதிவு செய்யப்பட்ட வா.சா.ஆ.7 உயிலை மறைத்து உண்மைக்கு மாறாக வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண

வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் உண்மைக்கு மாறானவை என்றும் என்றும் தாவாப்படி தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.07.28 21:07:57 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.